தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 5, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023
1992 மார்ச் 18, புதன் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்"

மது அருந்தக் கூடாது. ஒருவேளை சிலர் அருந்தினால் அவர்கள் சான்றோரால் மதிக்கப்படுவதை விரும்பாதவர்களாய் இருப்பர்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. கவன ஈர்ப்பு.

(அ) விரகாலூர் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு மானியம் வழங்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள்—இருக்கையில் இல்லை. திரு. சிங்காரம் கேட்கிறீர்களா ? (குறுக்கீடு) சரி, கேளுங்கள். திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஒன்றியம், விரகாலூரிலுள்ள உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிக்கு அரசு மானியம் வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

11–9–1990 நாளிட்ட கல்வித்துறை, அரசாணை (நிலை) எண் 1276-ன்படி திருச்சி மாவட்டம், விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளி மற்றும் இருங்காலூர் செயின்ட் ஜான் உயர்நிலைப் பள்ளி ஆகிய இரு பள்ளிகளும் எதிர் காலத்தில் எப்போதும் மேல் நிலை வகுப்புக்கு நிதியுதவி கோரக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. 26–7–1990-க்குப் பிறகு மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும் எந்த ஒரு தனியார் உயர் நிலைப் பள்ளியும் அரசின் நிதியுதவியை ஒருபோதும் கோரக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் மேல் நிலைப் பள்ளி களாக உயர்த்தப்பட வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்துள்ளது.

2. சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. லோகாம்பாள், விரகாலூர் கிராமம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்றும், அங்கு பயிலக்கூடிய மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூல் செய்து பள்ளியை நடத்த இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்து, ஒரு போதும் மேல் நிலை வகுப்புகளுக்கு நிதியுதவி கோரக்கூடாது என்ற நிபந்தனையை விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் மேல்நிலைப் பள்ளிக்கு மட்டும் தளர்த்தி மூன்றாண்டு களுக்கு மட்டும் நிதியுதவி கோரக்கூடாது என்று மாற்றி ஆணை வழங்குமாறு அரசைக் கோரினார். ஆனால், 26–7–1990க்குப் பிறகு மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் எந்த ஒரு 'தனியார் உயர் நிலைப் பள்ளிகளும், நிரந்தரமாக அரசின் நிதியுதவி மேல் நிலை வகுப்புகளுக்கு வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனை யின் அடிப்படையிலேயே மேல் நிலைப் பள்ளி தகுதி வழங்கப்படு வதால் விரகாலூர் செயின்ட் பீட்டர்ஸ் மேல் நிலைப் பள்ளிக்கு மட்டும் இந்த நிபந்தனையை வழங்க இயலாது என்று ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்களுக்கு ஒரு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திருமதி லோகாம்பாள் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு மாறாக அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆரம்பிக்கின்ற எந்தக் கல்வி நிறுவனமானாலும் அவர்களுக்கு நிதியுதவி செய்ய லாமா வேண்டாமா என்பதைத்தான் இப்பொழுது அரசு பரிசீலித் துக் கொண்டிருக்கிறது.